5th July 1962]

சந்தனத் தொழிற்சாலே

*132 கேள்வி.—திரு. எம். கமலநாதன்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி, ஹரூர், செங்கம் ஆகிய வட்டங்களில் கிடைக்கும் சந்தனக் கட்டைகளேக் கொண்டு ஒரு சந்தனத் தொழிற்சாலே நிறுவ உத்தேசமுண்டா?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: No, Sir.

திரு. ம. கமலநாதன்: சந்தனத் தொழிற்சாலேயொன்றை நிறுவ தற்போது உத்தேசம் இல்லே என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னூர்கள். அப்படியென்றுல், தற்போது அதற்கு வேண்டிய சந்தன மரங்கள் கிடைக்கவில்லே என்று அமைச்சர் அவர்கள் கருதுகிருரா? சந்தனத் தொழிற்சாலேயை அங்கே நிறுவ எத்தகைய சூழ்நிலே இருக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கருதுகிருர்?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: சந்தனக் கட்டையாகவே ஏலம் போடுவதில் சர்க்காருக்கு நிறையப் பணம் வருவதால், சந்தனத் தைலம் எடுப்பதற்கான திட்டம் எதுவும் இல்லே என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. கணேசன்: சமீபத்திலே ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சந்தனக் கட்டை களவு கண்டுபிடிக்கப்பட்டு அது வராந்தாவிலே போடப்பட்டிருந்து கெட்டுவிட்டது என்றெல்லாம் செய்தி வந்திருக்கிறதே, அதையெல்லாம் அரசாங்கம் கவனித்து ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும் என்று கருதுகிறதா? அல்லது கருதிற்ரு?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: அம்மாதிரி திருட்டுப் போவதற்கு ஏது ஒன்றும் இல்லே. அப்படியே திருட்டுப் போவதென்ருலுங்கூட, ஏதோ சொற்பமாக இருக்கலாமே தவிர, கனம் அங்கத்தினர் சொல்லும்படியான வகையிலே எதுவும் இருக்காது.

மதுபான பர்மிட்டுகள்

*133 கேள்வி.—திரு. டி. கர்ச்சா கவுடர்: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா மதுவிலக்கு கமிட்டிகளில் மதுபான பர்மிட்டுகள் வைத்துள்ள நபர்கள் அங்கம் வகிக்கிருர்களா?

(இ) ஆம் என்ருல் எந்தெந்த ஜில்லாவில் எத்தனே எத்தனே பேர்கள்?